## தலைப்பு 165 – தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் அதிபதி அறிக்கை – 2017 ஆம் ஆண்டு

2017 ஆம் ஆண்டு 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) சட்டத்தால் திருத்தம் செய்யப்பட்ட 2016 ஆம் ஆண்டு 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தில் முதலாவது அட்டவணையிலும் மூன்றாவது அட்டவணையிலும் குறிப்பிடப்பட்டுள்ள தலைப்பு மற்றும் விடய இலக்கத்திற்கமைவாக ஒதுக்கீட்டுக் கணக்கு, கணக்கிணக்ககூற்று என்பன என்பன தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க அமைச்சினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டது. அந்தக் கணக்குகளிலும் கணக்கிணக்கக் கூற்றுகளிலும் வெளிப்படுத்தும் நிதி மற்றும் பௌதீக செயலாற்றுகை என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரை பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது.

### 1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரது கணக்கீட்டு நெறிமுறை தொடர்பான பொறுப்பு

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதிக் கோவையில் நிதி ஒழுங்குவிதி 124 இன் பிரகாரம் அரசிறை சேர்த்தலும், அரசாங்கத்தின் பிற பணங்களைச் சேர்த்தலும் மற்றும் அரசாங்கத்தின் எல்லா நிதி நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல் தொடர்பான பொது கண்காணிப்பும் நிதி அமைச்சரின் பொறுப்பாகும். ஆகவே அவரால் அந்த பொறுப்பினை நிறைவேற்றும் பொருட்டு நிதி ஒழுங்குவிதிகள் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்களை நியமனம் செய்யப்பட்டுள்ளது. நிதி ஒழுங்குவிதி 125(1)(அ) இன் பிரகாரம் திணைக்களத்து தலைவர் தமது திணைக்களத்தின் சகல விதமான நிதிக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோத்தராவதுடன், அரசிறைக் கணக்கீட்டு உத்தியோகத்தரை திறைசேரியால் நியமனம் செய்யப்பட்டுள்ளது. பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட எல்லைக்குள் தமது கடமைப்பொறுப்புகளை நிறைவேற்றப்பட்டு சமர்ப்பிக்கப்படும் கணக்கீட்டு மற்றும் கணக்கிணக்க கூற்றுகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 148இ 149இ 150 மற்றும் 152 உறுப்புரைகளும், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்கத்தின் நிதி ஒழுங்குவிதிகள் மற்றும் நிருவாக ஒழுங்குவிதிகளுக்கமைவாக பேணிச் செல்லுதல், தயாரித்தல், நியாயமான வகையில் சமர்ப்பிப்பதற்கு ஏற்புடையதான உள்ளக கட்டுப்பாடுகளை திட்டமிடல், நடைமுறைப்படுத்தல் மற்றும் அவற்றை பேணதலும் இந்த பொறுப்புகளுள் உள்ளடங்கும்.

### 1.3 கணக்காய்வு விடயவெல்லை

தலைப்பு 165- தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்கம் தொடர்பான அமைச்சு 2017 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றுகை தொடர்பில் திட்டமிடல், அரச செலவினம், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வளங்களை முகாமைத்துவம் செய்தல், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளை பயன்படுத்தல், சட்டதிட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பவற்றுக்கு ஒழுங்கமைதல், புத்தகங்கள், ஆவணங்கள், அறிக்கைகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுகளை இற்றைப்படுத்தி பேணுதல், கணக்குகளை தயாரித்து காலத்திற்கேற்றவாறு சமர்ப்பித்தல், செயலாற்றுகை சுட்டிகளை அடிப்படையாகக்கொண்டு சம்பந்தப்பட்ட தரப்புகளிடம் செயலாற்றுகை அறிக்கைகளை வழங்குதல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசில் அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளின்கீழ் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மீளாய்விற்கான ஆண்டில் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 ஆம் ஆண்டு செப்தெம்பர் 17 ஆந் திகதி அமைச்சின் செயலாளரிடம் வழங்கப்பட்டது. கணக்கீடுகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுகள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள், கணக்காய்விற்கு சமர்ப்பித்த திட்டமிடல், கணக்கீடுகள், கணக்கிணக்கக் கூற்றுகள் மற்றும் செயலாற்றுகை அறிக்கைகள் பற்றிய மீளாய்வுகள் அத்துடன் கொடுக்கல்வாங்கல்களில் மாதிரிகள் தொடர்பான உறுதிப்பாடுகள் பரிசோதனைகளை அடிப்படையாகக் கொண்டுள்ளன. அந்த மீளாய்வு, பரிசோதனைகளின் விடயவெல்லை மற்றும் போதியளவு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள அலுவலக பதவியணி, ஏனைய வளங்கள்,

கால அவகாசம் போன்ற எல்லைகளுக்குள் இயன்றவரை விரிவான கணக்காய்வை மேற்கொள்ள முடியுமானவாறு தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்பு

2017 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்காக தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க அமைச்சில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வில் வெளிப்படுத்திக்கொண்ட கணக்காய்வு அவதானிப்புகள் மேற்படி 1:3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விரிவாக காட்டப்பட்டுள்ளன. அந்த அவதானிப்புகளில் போதியளவிலான மற்றும் முக்கியமான கணக்காய்வு அவதானிப்புகள் இவ்வறிக்கையில் 2.1 பந்தி தொடக்கம் 2.11 வரையிலான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. நிதி நிருவாகத்தில் போதியளவினை உறுதிப்படுத்தும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதி கோவையில் 127 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளை நிறைவேற்றும்போது வெளிப்படுத்திக்கொண்ட, பின்வரும் குறிப்பில் சாரம்சப்படுத்தி காட்டப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புகளுக்கமைவாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்கீட்டு நெறிமுறைகளை திருப்திகரமாக நிறைவேற்றியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

| நிதி ஒழுங்குவிதி 127 பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்கீட்டு நெறிமுறை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் அந்த ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகாமை | அவதானிப்பு உள்ளடக்கிய அறிக்கையில் பந்தி தொடர் |
|---|---|---|
| நிதி ஒழுங்குவிதி | | |
| 127 (1)(அ) சரியாகவும் நிதி சம்பந்தமான ஒழுங்கு நெறிப்படியும் நடைபெறுமாறு திணைக்கள நிதி சம்பந்தமான வேலைகளைத் திட்டமிட்டுள்ளார். (திணைக்களத்து நடவடிக்கைகள் நிதிக் கட்டளைகள் மற்றும் திணைக்களக் கட்டளைகளுக் கிணங்க மட்டும் நடைபெறுவதன்றி அரசாங்க அலுவல்களில் கொடுக்கல் வாங்கல்களில் எதிர்பார்க்கும் உயர்தர நேர்மையுடனும் நடைபெறுதல் வேண்டும்) | 1. செயற்றிட்டத்தின் கடமைகளை நிறைவேற்றப்படாமை | 2.1.1 |
| | 2. ஆவணப் பதிவேடுகள் மற்றும் புத்தகங்களை பேணப்படாமை | 2.7 |
| | 3. பெறுகை நடைமுறை திட்டத்தின் குறைப்பாடுகள் | 2.2.1 (அ) |

| | | | |
|---|---|---|---|
| 127(1)(ஆ) | செலவினங்கள் மற்றும் அரசிறை சேகரிப்புகள் தொடர்பாக போதியளவு கட்டுப்பாட்டை ஏற்படுத்தும் ஒரு முறையை தயாரித்திருத்தல் வேண்டும். | 1. இணங்கியொழுகாமை | 2.8 |
| | | 2. கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டங்களை நடத்தாமை. | 2.10 |
| | | 3. மணிதவள முகாமைத்துவத்தில் குறைப்பாடுகள் | 2.11 |
| 127(2) | தனது கட்டுப்பாட்டின் கீழுள்ள திணைக்களங்களில் நடப்புச் செலவினங்களும் புதிய அல்லது அதிகரித்த செலவுகளுக்குரிய உத்தேசங்களும் அவற்றின் சிக்கனமும் திறமையும் சம்பந்தமாக குறித்த அமைச்சில் நுண்ணித்தாக ஆராயப்படுகின்றன. | பெறுகை செயற்பாட்டினை நடைமுறைப்படுத்தும் குறைப்பாடுகள் | 2.2.1(ஆ)<br>(இ) |
| | | உள்ளக கணக்காய்வு | 2.9 |
| 127(3) | ஐயத்திற்குரிய அல்லது சிக்கலான விடயங்கள் யாவும், அவர் தனக்கே உரியதான நிருவாக அனுபவத்தையும் பகுத்தாய்வு அறிவினையும்கொண்டு அவற்றில் பிரயோகிப்பதற்கென அவருக்கு விடப்படுகின்றன. | ஏனைய முகாமைத்துவ குறைப்பாடுகள் | 2.3 |
| 127(4) | ஒதுக்கீட்டுக் கணக்குகள் ஒவ்வொரு கணக்கீட்டு உத்தியோகத்தராலும் முறையே சமர்ப்பிக்கப்பட்டு அவற்றில் அவர் கையொப்பமிட முன்னர் அமைச்சில் பரிசோதிக்கப்படுகின்ற, மதீப்பீடுகளிலும் உண்மையான செலவுகளிலும் ஏற்பட்டுள்ள முக்கியமான வேறுபாடுகளை நுட்பமாய் அவரால் ஆராயப்படுகின்றன. | 1. வருடாந்த செயலாற்றுகை அறிக்கையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படாமை | 2.1.2 |
| | | 2. கட்டுநிதி கணக்கில் குறைப்பாடுகள் | 2.5 |
| | | 3. வங்கி கணக்குகளை வழிநடாத்துவதில் குறைப்பாடுகள் | 2.6 |
| 127(5) | திணைக்களங்களின் ஒதுக்கீடுகளுக்கும் செலவுகளுக்குமுள்ள முக்கியமான வேறுபாடுகளும் அமைச்சில் நுட்பமாய் பரிசோதிக்கப்படுகின்றன | 1. ஏற்பாடு செய்திருந்த ஒதுக்கீடுகளை பயன்படுத்தாமை | 2.4(i) |
| | | 2. மிகை ஒதுக்கீடுகளை ஏற்பாடு செய்திருத்தல் | 2.4(ii) |

## 2. போதியளவிலானதும் முக்கியமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள்

### 2.1 செயலாற்றுகை

#### 2.1.1 கடமைப் பொறுப்புகளை நிறைவேற்றப்படாமை

செயற்றிட்டத்தில் உள்ளடக்கிய கடமைகளை நிறைவேற்றப்படாமை

வருடாந்த செயற்றிட்டத்தின்படி அமைச்சினால் 19 அலுவல்களை நிறைவேற்றப்பட வேண்டுமாயினும், அதில் 14 அலுவல்களை மட்டும் நிறைவேறற்ப்பட்டிருந்தது. அவ்வாறு நிறைவேறற்ப்படாத 05 அலுவல்களின் பொருட்டு மொத்தம் 181.5 மில்லயின் ரூபா ஒதுக்கீடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

#### 2.1.2 வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

2002 ஆம் ஆண்டு செப்தெம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கை பிரகாரம் தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க அமைச்சினால் நிதி ஆண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் மீளாய்விற்கான ஆண்டுக்கு ஏற்புடையதான செயலாற்றுகை அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும், அவ்வறிக்கை 2018 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 16 ஆந் திகதியிலும் சமர்ப்பிக்கப்படவில்லை.

### 2.2 பெறுகை நடைமுறைமூலம் வழங்கல் மற்றும் சேவைகளை பெற்றுக்கொள்ளுதல்

அமைச்சினால் அரசாங்கத்தின் பெறுகை வழிகாடடல்படி நடவடிக்கை மேற்கொண்டு வழங்கல் மற்றும் சேவைகளை பெற்றுக்கொள்வதற்கு 8.41 மில்லியன் ரூபாவிலான ஏற்பாடுகள் அளிக்கப்பட்டிருந்ததுடன், அதில் 7.71 மில்லியன் ரூபாவிலான ஒதுக்கீடுகளை பயன்படுத்தப்பட்டிருந்தது. விபரங்கள் பின்வருமாறாகும்.

| செலவு விடயம் | செலவு விடய விபரம் | ஏற்பாடு செய்திருந்த தேறிய ஒதுக்கீடு ரூபா.மில்லியன் | பயன்பாடு | மீதி |
|---|---|---|---|---|
| | | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் | ரூபா.மில்லியன் |
| | வழங்குதல்கள் | | | |
| 1201 | - எழுது கருவி பொருட்கள் மற்றும் அலுவலக தேவைகள் | 2.03 | 2.02 | 0.01 |
| 1203 | - உணவு பான வகைகள் மற்றும் சீரூடைகள் | 0.35 | 0.34 | 0.01 |

| | | | | |
|---|---|---|---|---|
| 1205 | - ஏனைய மூலதன சொத்துக்களை கைப்பற்றுதல் | 0.03 | 0.03 | - |
| 2102 | - தளவாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் | 1.50 | 1.50 | - |
| 2103 | - இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் | 4.50 | 3.82 | 0.68 |
| | மொத்தம் | 8.41 | 7.71 | 0.70 |

2.2.1 பெறுகைகளை திட்டமிடல்

(அ) பெறுகை திட்டமிடல் மற்றும் ஆரம்ப கட்டம்

மீளாய்விற்கான ஆண்டின் பொருட்டு வெளிநாட்டு ஒத்துழைப்பு, முதலீடுகள் மற்றும் பதவியணி பயிற்சி ஆகிய மூலதன செலவு விடயங்கள் தவிர்ந்த ஏனைய மூலதன செலவு ரூபா .268,843,080 ஆயினும், ரூபா. 8,325,000 இற்கு மட்டும் பெறுகை திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. ஆயினும், தயாரிக்கப்பட்டிருந்த பெறுகை திட்டம் அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டல் கோவையில் 4.2 (இ) வழிகாட்டலின் தேவைகளை நிறைவேற்றியிருக்கவில்லை.

(ஆ) பெறுகை வழிகாட்டலை நடைமுறைப்படுத்தல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டல் கோவையில் 3.4 மற்றும் 3.2 பிரகாரம் சந்தையில் வாங்குதல் முறை அல்லது திறந்த போட்டியுடன் கூடிய விலை கேள்வி கோரலின்றி, 2016 ஆம் ஆண்டில் பெறுகை நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்த நிறுவனங்களிலயே மீளாய்விற்கான ஆண்டில் ரூபா රු.4,533,238 பெறுமதியில் 03 பெறுகைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(ii) கலை மற்றும் கலாச்சார பயனபாடுகளின்ஊடாக நாட்டில் நல்லிணக்கத்தை மேம்பாடு செய்வதற்கான நிகழ்ச்சித் திட்டங்களில் இறுதி கட்டத்தின் கீழ் தேசிய சமாதானம் மற்றும் நல்லிணக்க பணியகத்தால் பல்வேறு கருப்பொருளின்கீழ் 08 வகையீடுகளை உள்ளடக்கி 31,500 நூல்களும் 12,050 சான்றிதழ்களும் அச்சிடும் பெறுகை நடவடிக்கை தொடர்பில் பின்வரும் குறைப்பாடுகள் காணப்பட்டன.

(அ) பெறுகை வழிகாட்டல் கோவையில் 4.3.1 (அ) பிரிவு பிரகாரம் மொத்த செலவு மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பெறுகை வழிகாட்டல் கோவையில் 3.2 பிரிவு பிரகாரம் திறந்த போட்டியுடன் கூடிய விலை கேள்விகள் கோராது, அச்சீட்டு திணைக்களத்திடமிருந்து தயாரிக்கப்பட்ட ரூபா.6,465,000 ஆன மதிப்பீட்டு தொகைக்கு நேரடியாக இந்த அச்சீட்டுப் பணியை அத் திணைக்களத்திடம் கையளிக்கப்பட்டிருந்தது.

(இ) (i) திரு.சார்ல்ஸ் தயாநந்த அவர்களின் 100 காட்டுன் சித்திரங்கள் உள்ளடக்கிய நூலின் 10,000 ம் பிரதிகள் அச்சிடுவதற்கான மதிப்பீட்டு தொகை ரூபா.1,780,000 ஆனதுடன், பின்னர் அந்த நூலில் அச்சிடப்பட வேண்டிய பிரதிகளின் எண்ணிக்கை 5,000 ம் வரை குறைக்கப்பட்டு ரூபா.1,495,000 செலுத்தப்பட்டிருந்தது. அதன்படி பிரதிகளின் எண்ணிக்கை குறைவடையும்போது ரூபா.178 ஆன வெட் வரியற்ற நூலின் செலவு ரூபா 260 வரை நூற்றுக்கு 46 ஆல் அதிகரிக்கப்பட்டிருந்தது.

(ii) மேற்படி அச்சீட்டு பணி 2017 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 31 ஆந் திகதியில் முடிவடைதல் வேண்டுமாயினும், 2018 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதமாகும்போது அச்சிடப்பட்டிருந்த புத்தகங்களின் எண்ணிக்கை 3இ805 மட்டுமாவதுடன், அதில் 950 புத்தகங்கள் தேசிய சமாதானம் மற்றும் நல்லிணக்க பணியகத்திடம் வழங்கப்பட்டிருந்தது. அச்சிடப்பட்ட மீதி புத்தகங்களின் தொகையை 2018 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 08 அந் திகதி வரை அமைச்சிடம் பெற்றுக்கொள்ளப்படவில்லை.

2.3 சொத்துக்களின் முகாமைத்துவம்

---

சொத்துக்கள் தொடர்பில் மேற்கொண்ட மாதிரி கணக்காய்வு பரிசோதனையின் குறைப்பாடுகள் பின்வருமாறு அறிய வந்தன.

(அ) எரிபொருள் செலவழிவை பரிசோதனை செய்யாமை

---

2016 ஆம் ஆண்டு திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கையில் 3.1 பந்தி பிரகாரம் வாகனங்களின் எரிபொருள் செலவழிவை பரிசோதனை செய்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை.

(ஆ) வருடாந்த பொருள் மீளாய்வினை நடாத்தல்

---

2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கை பிரகாரம் 2017 வருடாந்த பொருட் மீளாய்வினை மேற்கொண்டு அந்த அறிக்கைகளை சுற்றுநிருபத்தில் 3.1.6 பந்தி பிரகாரம், 2018 மார்ச் 17 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் அதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும், அமைச்சினால் அந்த அறிக்கைகளை 2018 ஆம் ஆண்டு ஒக்டோபர் 10 ஆந் திகதியிலும் சமர்ப்பிக்கப்படவில்லை.

(இ) ஏனைய நிறுவனங்களுக்குரிய சொத்துக்களை முறையின்றி பயன்படுத்தல்

---

பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறிய கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சிற்குரிய டுயனெ உசரளநச மோட்டார் வண்டியை கையேற்கப்படாது தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்கம் தொடர்பான அமைச்சின் செயலாளரால் 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தொடக்கம் 2018 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 24 ஆந் திகதி வரை பயன்படுத்தப்பட்டிருந்தது.

2.4 கடமைப்பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தால் ஏற்பாடு செய்திருந்த ஒதுக்கீடுகளை பயன்படுத்தல்

---

2017 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த 03 ஆண்டு காலப் பகுதியில் அமைச்சிடம் ஏற்பாடு செய்திருந்த ஒதுக்கீடு, பயன்பாடு மற்றும் மிகுதி தொடர்பான தகவல்கள் பின்வருமாறாகும்.

| ஆண்டு | செலவின வகை | தேறிய ஒதுக்கீடு | பயன்பாடு | மீதி | மிகுதி- தேறிய ஒதுக்கீட்டில் சதவீதமாக |
|---|---|---|---|---|---|
| ------- | -------------- | --------------- | ------------- | -------------ரூபா. | ------------------ |
| | | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | மில்லியன் | |
| 2015 | மீண்டுவருஞ் | 29.24 | 5.83 | 23.41 | 80 |
| | மூலதனம் | 3.56 | 0.79 | 2.77 | 78 |
| | மொத்தம் | 32.80 | 6.62 | 26.18 | 80 |
| 2016 | மீண்டுவருஞ் | 76.99 | 46.62 | 30.37 | 39 |
| | மூலதனம் | 320.21 | 290.73 | 29.48 | 9 |
| | மொத்தம் | 397.20 | 337.35 | 59.85 | 15 |
| 2017 | மீண்டுவருஞ் | 120.06 | 105.03 | 15.03 | 13 |
| | மூலதனம் | 3,419.35 | 2,709.52 | 709.83 | 21 |
| | மொத்தம் | 3,539.40 | 2,814.55 | 724.86 | 20 |

மீளாய்விற்கான ஆண்டு தொடர்பில் பின்வருமாறு அவதானிக்கப்படுகின்றன.

(i) ஏற்பாடு செய்திருந்த ஒதுக்கீடுகளை பயன்படுத்தாமை

02 செலவு விடயங்களின் பொருட்டு ஏற்பாடு செய்திருந்த ரூபா. 450,000 ஆன மொத்த தேறிய ஒதுக்கீடுகளை எதுவித பயன்பாடுகளுமின்றி மொத்தமாக மிகுதியாக காணப்பட்டது.

(ii) மிகை ஒதுக்கீடுகளை ஏற்பாடு செய்திருத்தல்

17 செலவு விடயங்களின் மொத்தம் 3194.15 மில்லியன் ரூபாவில் மிகை ஏற்பாடு செய்திருத்தல் காரணமாக, அந்த செலவு விடயங்களுக்கு ஏற்புடையதான ஒதுக்கீடுகளின் மொத்தம் 2இ478.31 மில்லியன் ரூபா மட்டும் பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் காரணமாக 715.84 மில்லியன் ரூபா எஞ்சியதுடன். அந்த மிகுதி தேறிய ஒதுக்கீடுகளிலிருந்து நூற்றுக்கு 11 தொடக்கம் நூற்றுக்கு 98 வரையிலான எல்லையைக் கொண்டிருந்தது.

## 2.5 கட்டு நிதி கணக்கு

2017 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் தீர்க்கப்படாத கட்டு நிதியின் மீதி பெறுமதி 81.90 மில்லியன் ரூபா ஆவதுடன். அதனை முற்று முழுதாக 2018 ஆம் ஆண்டில் தீர்க்கப்பட்டிருந்தது.

2.6 வங்கி கணக்கினை வழிநடாத்தல்

சீராக்கப்பட வேண்டிய மீதி

2016 ஆம் ஆண்டு திசெம்பர் மற்றும் 2017 ஆம் ஆண்டு யூலை மாதங்களில் வழங்கப்பட்டிருந்த மொத்தம் ரூபா 137இ819 பெறுமதியான 02 காசோலைகள் தொடர்பில் நிதி ஒழுங்குவிதி 396(ஈ) பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

2.7 ஆவணப் பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் ஏன்பவற்றை பேணாமை

அமைச்சினால் பின்வரும் பதிவேடுகள் பேணப்படவில்லையென மாதிரி கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| | பதிவேடு வகை | சம்பந்தப்பட்ட ஒழுங்குவிதி |
|---|---|---|
| (அ) | கிடைக்கப்பெறும் காசோலைகள் மற்றும் பணக் கட்டளை பதிவேடு | ஒழுங்குவிதி 451 |
| (ஆ) | பிணை பதிவேடு | ஒழுங்குவிதி 891(1) |
| (இ) | மின்சார உபகரணங்கள் தொடர்பான பதிவேடு | நிதி ஒழுங்குவிதி 454(2) |
| (ஈ) | எரிபொருள் மற்றும் மசகு எண்ணெய் தொடர்பான பதிவேடு | ஒழுங்குவிதி 1647(ஈ) |
| (உ) | வாகனங்களை பட்டியலிடும் அட்டபணை | நிதி ஒழுங்குவிதி 1647(இ) |
| (ஊ) | கணினி துணைக் கருவிகள் மற்றும் மென்பொருள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு | 2002 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 28 ஆந் திகதிய அய்ஏஅய்.˙.2002.˙.02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை |
| (எ) | பொறுப்பு பதிவேடு | நிதி ஒழுங்குவிதி 214 |

2.8 இணங்கியொழுகாமை

சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பவற்றுக்கு இணங்கியொழுகாமை

தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்கம் தொடர்பான அமைச்சரிடம் இணைக்கப்பட்டிருந்த உத்தியோகபூர்வ வாகனமொன்று 2016 ஆம் ஆண்டு ஒக்டோபர் 20 மற்றும் 21 ஆகிய திகதிகளில் இரண்டு சாரதிகளால் விபத்துக்குள்ளாகியிருந்ததுடன், நிதி ஒழுங்குவிதி 103(1)(அ) பிரகாரம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் அறிக்கையிடப்படவில்லை. நிதி ஒழுங்குவிதி 104(1)(ஆ) கட்டளைகளுக்கு முரணாக ஆரம்ப விசாரணை நடவடிக்கைகள் ஆரம்பிப்பதற்கு தாமதமாகியிருத்தல் காரணமாக 104(3) பிரகாரம் பொது திறைசேரியிடம் உடனடியாக அனுப்பி வைக்க வேண்டிய தொடக்க அறிக்கை விபத்து ஏற்பட்டு 08 மாதங்களுக்கு பின்னரும்,

மூன்று மாதங்களுக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய முழு அறிக்கை 1 ஆண்டும் 05 மாதங்களும் தாமதமாகி சமரப்பிக்கப்பட்டிருந்தது.

2.9 உள்ளக கணக்காய்வு
-----------------------------------

பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் தமது அமைச்சுகளில் கடமைகளையும் பொறுப்புகளையும் நிறைவேற்றுவதற்காக உள்ளக கணக்காய்வு பிரிவுகள் தாபித்தக்கொள்ளுதல் வேண்டுமென நிதி ஒழுங்குவிதி 133 மூலம் வலியுறுத்தப்பட்டிருப்பினும், தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் நல்லிணக்க அமைச்சு உள்ளக கணக்காய்வு பிரிவினை தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

2.10 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு
------------------------------------------------------------

2009 ஆம் ஆண்டு யூன் மாதம் 09 ஆந் திகதிய னுஆயு.ஃ.2009(ஐ) ஆம் இலக்க கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ சுற்றறிக்கை பிரகாரம் அமைச்சினால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டம் ஓராண்டுக்கு 4 முறை நடாத்தப்பட வேண்டுமாயினும், 2017 ஆம் அண்டில் அமைச்சு 2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டங்களை நடாத்தியிருந்தது.

2.11 மணிதவள முகாமைத்துவம்
-----------------------------------------

இணைக்கப்பட்டுள்ள பதவியணி, உண்யைமான பதவியணி மற்றும் ஆளுக்குரிய வேதனாதிகளுக்கான செலவினம்
------------------------------------------------------------------------------------------------------------------------

அமைச்சின் கடமைப் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காக 2017 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் அங்கீகரிக்கப்பட்ட, உண்மையான மற்றும் வெற்றிட பதவியணி தொடரப்பான விபரங்கள் பின்வருமாறாகும். மீளாய்விற்கான ஆண்டில் அமைச்சினால் ஆளுக்குரிய வேதனாதிகளின் செலவு தொகுதி பொருட்டு 35.33 மில்லியன் ரூபா செலவிடப்பட்டிருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உண்மையான பதவியணி | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேட்ட மட்டம் | 12 | 09 | 03 |
| (ii) | மூன்றாம் நிலை மட்டம் | 04 | 01 | 03 |
| (iii) | இரண்டாம் நிலை மட்டம் | 25 | 14 | 11 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 12 | 12 | - |
| (v) | அமய.ஃ.ஒப்பந்த | 04 | 01 | 03 |
| | மொத்தம் | 57 | 37 | 20 |

பதவியணி பயிற்சி
-----------------------------
பதவியணியை எப்போதும் பயிற்றுவிக்கும் தேவை உள்ளதால் அமைச்சினால் அங்கு பதவியணியை பயிற்றுவிப்பதற்காக ரூபா.500,000 ஆன தொகை ஒதுக்கீடு செய்திருந்ததுடன், செலவினம் ரூபா. 463. 725 ஆகியிருந்தது. ஆயினும் எதுவித பயிற்சியும் பெற்றிராத அலுவலர்களின் எண்ணிக்கை 28 ஆக காணப்பட்டது.